## 15

# "தேவன் இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்"

## யோவான் 3:16, ஒரு ஆழ்ந்த கண்ணோட்டம்

> *"சர்ப்பமானது மோசேயினால் வனாந்தரத்திலே உயர்த்தப் பட்டதுபோல மனுஷகுமாரனும், தன்னை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும் படிக்கு உயர்த்தப்படவேண்டும்."*
>
> *"தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ, அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும் படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப் படுவதற்காகவே அவரை அனுப்பினார்"[1] (யோவா. 3:14-17).*

*இந்த வசனப்பகுதியில், நாம் வேதாகமத்தில் மிகவும் பிரபலமான வேத பாடத்தை - "தங்க" வாக்கியத்தைக் கொண்டுள்ளோம், யோவான் 3:16: "தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்." இந்த வசனமானது குறைந்தபட்சம் பின்வரும் இரண்டு காரணங்களுக்காக வேதாகமத்தின் மாபெரும் வசனங்களில் ஒன்றாக உள்ளது: (1) இது தேவனுடைய திட்டத்தின் முழுமையான விரிவளவைத் தொடுகிறது.[2] பதினாறாம் நூற்றாண்டின் மிகப் புகழ்பெற்ற சீர்திருத்தவாத தலைவரான மார்ட்டின் லூத்தர், இதை "சிற்றளவிலான வேதாகமம்" என்று அழைத்தார். (2) இது மிக உயர்வான வார்த்தைகளினால் நிறைந்துள்ளது: மிக மேன்மையான வார்த்தைகள் மனிதனுக்கு மிகவும் ஆச்சரியமான ஆய்வுக் கருத்துக்களை ஆலோசனையாக அளிக்கின்றன.[3]*

### "தேவன்": மாபெரும் ஜீவி

*உலகம், மனிதன் மற்றும் நன்மையான எல்லா விஷயங்களும் தேவனில் தொடங்குவது போன்றே நம் வேத பாடப்பகுதியும் அவரிலேயே தொடங் குகிறது: "தேவன் ... இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்."*

*இவ்விடத்தில் மாபெரும் ஜீவி இருக்கின்றார். தேவனைக் காட்டிலும் பெரிதான ஒன்றை நமது சிந்தையானது கற்பனை செய்ய முடியாது. அமெரிக்காவின் குறிப்பிடத்தக்க அரசியல்வாதி ஒருவர், தமது சிந்தையில் உட்புகுந்தவைகளிலேயே தேவனைப் பற்றிய சிந்தைதான் மிகவும் பெரியது என்றும் அவருக்குத் தாம் தனிப்பட்ட வகையில் பொறுப்புள்ளவராக இருக்கின்றார் என்றும் கூறினார்.[4]*

*தேவனைப் பற்றிப் பேசுகையில் பவுல், "நாம் வேண்டிக்கொள்ளுகிற தற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியை செய்கிற வல்லமையின்படியே ..." (எபே. 3:20) என்று எழுதினார். உங்கள் கற்பனை தறிகெட்டு ஓடட்டும்; [என்றபோதிலும்] தேவன் செய்ய முடியாத ஒன்று என்று நீங்கள் எதையும் நினைத்துப் பார்க்க[வும்] முடியாது.[5] தேவனைப் பற்றி முற்றிலுமாகப் புரிந்துகொள்வதற்கு, நாம் அவருக்குச் சமமாக இருக்க வேண்டிய அளவுக்கு, அவர் அவ்வளவு பெரியவராக இருக்கின்றார்: [அவரைப் புரிந்துகொள்ள வேண்டுமென்றால்] நாம் தேவர்களாகவே இருக்க வேண்டும்!*

## *"தம்முடைய ஒரேபேறான குமாரனை": மாபெரும் ஈவு*

*தேவன் தாம் கொடுத்த ஈவினால் தமது அன்பின் மாபெரும் தன்மையை காண்பித்தார்: "தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனைக் கொடுக்குமளவுக்கு உலகத்தில் இவ்வளவாய் அன்புகூர்ந்தார்," இந்த குமாரன் மாபெரும் ஈவாக இருக்கின்றார். பல பரிசுகள் தரப்பட்டுள்ளன. செல்வந்தர்களான மனிதர்கள் தகுந்த காரணங்களுக்காக பெருந்தொகை யான பணத்தை - சில வேளைகளில் நம்புவதற்கரிய பெருந்தொகைகளை - கொடுக்கின்றதாக அறியப்பட்டுள்ளார்கள், ஆனால் எந்த ஒரு ஈவும் இந்த ஈவுடன் ஒப்பிடத்தக்கது அல்ல.*

*தேவன் என்ன கொடுத்தார் என்பதை ஆழ்ந்து சிந்தியுங்கள்: (1) அவர் தமது குமாரனைக் கொடுத்தார். அன்பார்ந்த, கீழ்ப்படிதல் உள்ள, கடமை உணர்வுமிகுந்த ஒரு மகனைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள். அப்படிப்பட்ட ஒரு மகனைக் கொடுத்தல் என்பது இருதயத்தை எவ்வளவாகக் கிழிப்பதாக இருக்கும்! (2) தேவன் தமது குமாரனைக் கொடுத்தார், அதுவும் தமது "ஒரேபேறான குமாரனைக்"[6] கொடுத்தார். குமாரன் - அவரைப் போன்றும் அவரது சாயலிலும் தமது நெற்றியில் தெய்வீகத்தின் முத்திரையும் கொண்டிருந்த குமாரன்! ஒரே மகனைக் கொடுத்தல் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள். (3) தேவன் தமது ஒரே மகனைக் கொடுத்ததுடன், தமது அந்த ஒரே மகனைப் பலியாக ஒப்புக்கொடுத்தார். தகுதியில்லாத மக்களுக்காக இயேசு ஒரு பயங்கரமான, வெட்கக்கேடான மரணத்தை அடைவார். தேவன் தமது குமாரனின் கண்ணீர்கள் தமது இருதயத்தைக் கிழித்தாலும் அவரை ஒப்புக்கொடுப்பார்!*

*இங்கு நாம் முற்றிலும் புரிந்துகொள்ளத் தொடங்க முடியாத அளவுக்கு இந்த ஈவு மிகவும் பெரியதாக உள்ளது. பவுல், "தேவன் அருளிய சொல்லி*

*முடியாத ஈவுக்காக அவருக்கு ஸ்தோத்திரம்" (2 கொரி. 9:15) என்று கூறினார்.* [KJV*யில் மற்றும் தமிழில் "சொல்லி முடியாத" என்றே உள்ளது*] *உலகில் சில விஷயங்களைப் பற்றி - உதாரணமாக உலகத்தின் மக்கள் தொகை அல்லது ஒரு நாட்டின் கடன் போன்றவைகளைப் பற்றி - நாம் புரிந்துகொள்ள முடியாது, ஆனால் அவற்றைப் பற்றி நாம் பேசவாவது முடியும், ஆனால் நாம் மிகச் சரியாகப் பேசக் கூட முடியாதபடிக்கு தேவனுடைய ஈவு என்பது முற்றிலும் புரிந்துகொள்ள முடியாததாக உள்ளது. "ஆச்சரியமான அன்பு, தெய்வீகமான அன்பு, என் ஆத்துமாவை, என் வாழ்வை, என் எல்லாவற்றையும் கேட்கிறது!"*[7]

## *"விசுவாசிக்கிறவன்":*
## *மாபெரும் அஸ்திபாரம்*

*இந்த மாபெரும் வாய்ப்பை அனுகூலப்படுத்திக் கொள்வதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்? நம் வேத பாடப் பகுதியானது "அவரை விசுவாசிக்கிறவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு" என்று கூறுகிறது. விசுவாசம் என்பது மாபெரும் அஸ்திபாரமாக உள்ளது. நாம் கிறிஸ்தவர்கள் ஆவதற்கும் கிறிஸ்தவர்களாகச் செயல்படுவதற்கும் தேவையான எல்லாம் அதின் விசுவாசத்தின் மீதே அமைந்துள்ளது. "விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்; ஏனென்றால் தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும்" (எபி. 11:6).*

*யோவான் 3:16ல் உள்ள "விசுவாசிக்கிறவன்" என்ற வார்த்தையானது வெறுமனே ஒரு மன உச்சரிப்பாக மட்டும் இருப்பதில்லை என்பது வலியுறுத்தப்பட வேண்டும்.* The Amplified Bible *(1987 பதிப்பு) என்ற வேதாகமத்தில் இவ்வசனம் பின்வருமாறு மொழிபெயர்க்கப்பட்டுள்ளது:* "For God so greatly loved and dearly prized the world that He [even] gave up His only-begotten (unique) Son, so that whoever believes in *(trusts in, clings to, relies on)* Him shall not perish ... but have eternal (everlasting) life." *இதனைத் தமிழில் பின்வருமாறு மொழிபெயர்க்கலாம்: "தேவன் தம்முடைய ஒரேபேறான (தனிச்சிறப்பான) குமாரனை விசுவாசிக்கிறவர் (நம்புகிறவர், பிடித்துக் கொள்ளுகிறவர், சார்ந்திருக்கிறவர்) எவரோ அவர் கெட்டுப்போகாமல் நித்திய (என்றென்றைக்கும் உள்ள) வாழ்வைப் பெறும்படிக்கு அவரை*[*யே*] *தந்தருளி உலகத்தின்மீது இவ்வளவு பெரிதான அன்புகூர்ந்து அதை இவ்வளவு அன்பாய் மதித்தார்."*

*உண்மையான விசுவாசத்தில் தேவனுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிதல் உள்ளடங்குகிறது (யாக்.2:20ஐக் காணவும்). பவுல், "கிறிஸ்து இயேசுவினிடத்தில் விருத்தசேதனமும் விருத்தசேதனமில்லாமையும் ஒன்றுக்கும் உதவாது, அன்பினால் கிரியை செய்கிற விசுவாசமே உதவும்" (கலா. 5:6) என்று எழுதினார். ஒருவர், விசுவாசத்தின் அஸ்திபாரத்தில் கட்டியெழுப்பப் பட்டு அன்பினால் தூண்டப்படுகின்றபோது, அவர் பாவங்களை விட்டு*

*மனந்திரும்புவார் (லூக். 13:3), மனிதர்களுக்கு முன்பாகத் தமது விசுவாசத்தை அறிக்கையிடுவார் (மத். 10:32), மற்றும் பாவமன்னிப்பிற் கென்று ஞானஸ்நானத்தில் அடக்கம் செய்யப்படுவார் (அப். 2:38).*

## *"அவரில்" [இயேசுவில்]: மாபெரும் ஈர்ப்பு*

*இப்படிப்பட்ட விசுவாசத்தை உண்டாக்குவது எது? நம்மைக் கீழ்ப்படியத் தூண்டுவது எது? "விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல்." இயேசு, இரட்சிப்பைச் சாத்தியமானதாக்குகின்றார் அவரே [எல்லாக்] காலங்களிலும் மாபெரும் ஈர்ப்புக்குரியவராக இருக்கின்றார். அவர், "நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்ளுவேன்" (யோவா. 12:32) என்று கூறினார். நாம் ஏதோ ஒரு மனிதர்மீதோ, ஏதோ ஒரு உபதேசத்தின்மீதோ, அல்லது ஏதோ ஒரு மத முறைமையின்மீதோ விசுவாசம் கொண்டிருப்பதில்லை. நமது பாவங்களுக்காக மரித்த கிறிஸ்துவின் மீதே நமது விசுவாசம் உள்ளது!*

## *"எவனோ": மாபெரும் வாய்ப்பு*

*தேவனைப் பற்றியும் கிறிஸ்துவைப் பற்றியும் பேசியுள்ள நாம், கடைசியில் இவ்வேதப் பாடப் பகுதியில் நம்மிடத்திற்கு வருகின்றோம்: "தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்." "எவனோ" என்ற வார்த்தையானது உலகத்தில் உள்ள மாபெரும் வாய்ப்பை அறிவிக்கிறது. தேவனுடைய அன்பின் அளிப்புகள் எல்லாருக்குமானதாக உள்ளது (லூக். 2:10; மத். 28:19; அப். 10:34, 35; 17:30; 2 பேது. 3:9). இயேசு தமது சீஷர்களிடத்தில் "நீங்கள் உலகமெங்கும் போய், சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" (மாற். 16:15) என்று கூறினார்.*

*"எவனோ" என்ற வார்த்தையானது தனிநபர்கள் என்ற வகையில் நமக்கு அர்த்தம் நிறைந்ததாக இருக்க வேண்டும். யோவான் 3:16 வாசிக்கப்படும் விதத்தைத் தாம் பாராட்டுவதாக நன்கு அறியப்பட்ட பத்தொன்பதாம் நூற்றாண்டு பிரசங்கியார் பிலிப்ஸ் புரூக்ஸ் அவர்கள் கூறினார் என்று நான் நம்புகின்றேன்: தேவன், "அமெரிக்கர்கள் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு" என்று கூறியிருக்கலாம், ஆனால் லத்தீன் அமெரிக்கர்கள், தென் அமெரிக்கர்கள், வட அமெரிக்கர்கள் இன்னும் மற்ற அமெரிக்கர்கள் உள்ளார்கள். தேவன் "புரூக்ஸ்கள் நித்திய ஜீவனைப் பெறும் படிக்கு" என்று கூறியிருக்கலாம், ஆனால் புரூக்ஸ் என்ற பெயருடைய மக்கள் பலர் இருக்கின்றார்கள். தேவன், "பிலிப்ஸ் புரூக்ஸ் விசுவாசித்தால், அவர் இரட்சிக்கப்படுவார்" என்று கூடக் கூறியிருக்கலாம் - ஆனால், ஒன்றுக்கும் அதிகமான பிலிப்ஸ் புரூக்ஸ் இருக்கக்கூடும்; அப்போதும் கூடச்*

சந்தேகம் நிலவியிருக்க முடியும். "தேவன் 'எவனோ' என்று கூறியிருப்பதற்காக நான் எவ்வளவோ நன்றி நிறைந்தவனாக இருக்கின்றேன், ஏனெனில் அது எனக்கும் பொருந்துகிறது என்று நான் அறிகின்றேன்!" என்று பிலிப்ஸ் புரூக்ஸ் அவர்கள் கூறினார். நாம் ஒவ்வொருவரும் இந்த வசனத்தை வாசித்து நாம் இரட்சிக்கப்பட முடியும் என்று அறிய முடியும்!

ஆயினும், "எவனோ" என்ற வார்த்தையானது நம்மீது பொறுப்பை வைக்கிறது என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். உலகமானது "மனவிருப்பமுள்ள எவரும்" மற்றும் "விருப்பமற்ற எவரும்" என்ற பிரிவுகளால் ஆகியுள்ளது. இந்த மகிமையுள்ள வாய்ப்பை (வெளி. 22:17) நாம் அனுகூலப்படுத்துவோமா இல்லையா என்பதை நாம் ஒவ்வொருவருமே முடிவுசெய்கின்றோம். நாம் ஒவ்வொருவரும் தத்தமது சொந்த நித்திய அடைவிடத்தைத் தீர்மானிக்கின்றோம்.

## "அவன் கெட்டுப்போகாமல்": மாபெரும் துன்பம்

நாம் இந்த விசுவாசத்தைக் கொண்டிருந்தால், விளைவு என்னவாக இருக்கும்? "... விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் ..." நமது கீழ்ப்படிதலுள்ள விசுவாசமானது ஒரு மனிதன் வீழ்ச்சியடைய முடியும் என்ற பெருந்துன்பத்தில் விழுந்து விடாமல் நம்மைத் தடை செய்யும்.

இந்த வாழ்வில் பல துன்பங்கள் ஏற்படுகின்றன. ஒரு களஞ்சியம் எரிந்துபோய், ஒரு விவசாயினுடைய கருவிகளும் பொருட்களும் யாவும் அழிந்து போகின்றன, அவர் "நான் நாசமானேன்"[8] என்கிறார். வெள்ளத்தில் ஒரு வீடு அதில் இருந்த குடும்பத்தின் பூமிக்குரிய உடைமைகள் யாவற்றுடனும் இழக்கப்படுகிறது, அவர்கள் "நாங்கள் நாசமானோம்" என்று அழுகின்றார்கள். ஒரு பெரிய குடும்பத்தின் கணவரும் தந்தையுமானவர் இறக்கின்றார், அந்தக் குடும்பம் "நாங்கள் நாசமானோம்" என்று உடைந்துபோன இருதயத்துடன் கதறுகிறது. ஒருவர் தமது உடல் நலத்தை இழக்கின்றார், அவரும்கூட "நான் நாசமானேன்" என்று நினைக்கின்றார். நான் சொல்வதைக் கேளுங்கள்: வாழ்வின் துன்பம் எவ்வளவாக இருந்தாலும், ஒரு மனிதர் தம்மை நித்தியத்திற்கு இழந்துபோகாத வரைக்கும் ஒருபோதும் நாசமாவது இல்லை. பின்பு அவர், "கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்தும், அவருடைய வல்லமை பொருந்திய மகிமையிலிருந்தும் நீங்கலாகி நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்" (2 தெச. 1:10; மேலும் மத். 25:46; வெளி. 20:10ஐக் காணவும்). "கெட்டுப்போகுதல்" என்ற வார்த்தை அதையே அர்த்தப்படுத்துகிறது!

## “[ஆனால்]”:
## மாபெரும் வேறுபாடு

இந்த வேத பாடப்பகுதியானது “கெட்டுப்போகாமல்” என்பதோடு முடிந்து விடுவதில்லை என்பதில் நான் மகிழ்ச்சி அடைகின்றேன். இது, “... விசுவாசிக்கிறவன் எவனோ, அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு” என்று தொடருகிறது. [“ஆனால்”] என்ற வார்த்தை உலகத்தில் மாபெரும் வித்தியாசத்தை ஏற்படுத்துகிறது. இந்த வேத பாடப்பகுதியில், ஒரு புறத்தில் நாம் “கெட்டுப்போகாமல்” என்ற வார்த்தையையும் மறுபுறத்தில் நாம் “நித்தியஜீவனை” என்ற வார்த்தையையும் கொண்டுள்ளோம். இவ்விரண்டிற்கும் இடையில், வேறுபாட்டை ஏற்படுத்துகிற “ஆனால்” என்ற முரண்பாட்டு இடைச் சொல்லைக் கொண்டுள்ளோம்!

## “நித்திய ஜீவனை அடையும்படிக்கு”:
## மாபெரும் வாக்குத்தத்தம்

இவ்வசனப்பகுதி, “... விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் *நித்திய ஜீவனை அடையும்படிக்கு*” என்ற வார்த்தைகளைக் கொண்டுள்ளது. இங்கு ஒரு மாபெரும் வாக்குத்தத்தம் உள்ளது: இது தேவனுடன் ஒரு நித்தியம்[9] என்பதன் வாக்குத்தத்தமாக உள்ளது, அங்கு “அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை; முந்தினவைகள் ஒழிந்துபோயின” (வெளி. 21:4). நீங்கள் நம்பிக்கை கொண்டு கீழ்ப்படிந்தால் இதுவே உங்களுக்குத் தேவனுடைய வாக்குத்தத்தமாக உள்ளது!

## “அவரைத் தந்தருளி”:
## மாபெரும் செயல்பாடு

மாபெரும் ஜீவியமானவர் மாபெரும் தனிப் பண்பை உடையவராயிருப்பதால் மாபெரும் [மக்கள்] குழுவிற்கு அவர் என்ன செய்தார்? “தேவன் ... *அவரைத் தந்தருளி*, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.” மூன்று செயல்பாடுகள் நம்மைத் தெய்வீகத்துடன் நெருக்கமாகக் கொண்டு சேர்க்கின்றன: கொடுத்தல், மன்னித்தல் மற்றும் நன்றி செலுத்துதல் [giving, forgiving and thanksgiving] -ஆங்கில மொழியில் இம்மூன்று வார்த்தைகளுக்கும் giving [கொடுத்தல்] என்பதே வேர்/மூல வார்த்தையாக உள்ளது, இது மிகவும் மாபெரும் செயலாக உள்ளது.[10]

## *“இவ்வளவாய் உலகத்தில்”:*
## மாபெரும் குழு

தேவன் இந்த தனிப் பண்பை யாருக்கு நீட்டித்தார்? “தேவன் … அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.” உலகம் - இது நமது சிந்தைகள் கற்பனை செய்யக்கூடிய மாபெரும் குழுவாக உள்ளது - வாழ்ந்திருந்த, இப்போது வாழ்கின்ற, இந்த பூமி அழிவதற்கு முன்பு இனி வாழப்போகின்ற யாவரும் சேர்ந்ததே இந்த உலகமாக உள்ளது, இது நமது சிந்தைகள் கற்பனை செய்யக் கூடிய மாபெரும் குழுவாய் இருப்பது மட்டுமின்றி, இது ஒரு தகுதியற்ற குழுவாகவும் இருக்கிறது: இது ஒரு பாவம் நிறைந்த உலகமாக, கீழ்ப்படிதல் இல்லாத உலகமாக, அந்தகாரத்தில் உள்ள ஒரு உலகமாக இருக்கிறது.[11] தேவன் இந்த தேவபக்தியற்ற உலகத்தைக் கீழே கண்ணோக்கி இதை அன்புகூர்ந்தார். தேவன் *நம்மைக்* கீழே கண்ணோக்கி நம்மீது அன்புகூர்ந்தார்.

ஆப்பிரிக்காவிலிருந்து வந்த ஊழியர் ஒருவர், சிறுபையன்களின் குழு ஒன்றிற்கு ஒருமுறை உரை நிகழ்த்தினார். அவர், “ஆப்பிரிக்காவில் நாங்கள் பிரசங்கிக்கும் சுவிசேஷம் பற்றி உங்களிடத்தில் கூற நான் விரும்புகின்றேன். இங்கிருப்பவர்களில் நல்ல பையன்கள் எல்லாரும் உங்கள் கைகளை உயர்த்துவீர்களா?” ஒரு கை கூட மேலே எழும்பவில்லை. அவர் புன்முறுவல் செய்துகொண்டே, “அப்படியென்றால், நாங்கள் ஆப்பிரிக்காவுக்குக் கொண்டுள்ள அதே செய்தியையே நான் உங்களுக்கும் கொண்டுள்ளேன்: தேவன் குறும்புக்காரப் பையன்களை அன்புகூருகின்றார்.”

அது சரியானதாக ஒலிக்காதிருக்கலாம், ஆனால் இதுவே சத்தியமாக உள்ளது. “நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்” (ரோமர் 5:8).[12]

## *“அன்புகூர்ந்தார்”:*
## மாபெரும் தனிப்பண்பு

மாபெரும் ஜீவியை[தேவனை]ப் பற்றி, “தேவன் … இவ்வளவாய் உலகத்தில் *அன்புகூர்ந்தார்*” என்று கூறப்படுகிறது. அன்பு என்பது உலகத்தில் மாபெரும் தனிப் பண்பாக உள்ளது: “இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது; இவைகளில் அன்பே பெரியது” (1 கொரி. 13:13).[13] நமது வேதப் பாடப் பகுதியானது, தேவன் இந்த மாபெரும் தனிப் பண்பை மாபெரும் அளவில்[14] கொண்டிருந்தார் என்று அறிவிக்கிறது: “தேவன் இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.”

தேவனுடைய அன்பிற்கு அளவுகள் உள்ளன என்று எபேசியர் 3:17-19 அறிவிக்கிறது: “… நீங்கள் … கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து; அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்துகொள்ள …” தேவனுடைய அன்பின் “நீளம்” என்ன? நமது வேத பாடப்பகுதியானது இவ்வாறு கூறுகிறது: “தேவன் …

*தம்முடைய ஒரேபேறான குமாரனை ... தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" தேவனுடைய அன்பு எல்லா வழிமுறைகளிலும் கடந்து சென்றது![15]*

## *முடிவுரை*

*இங்கு ஒரே ஒரு வசனத்தில் சுவிசேஷ வரலாற்றின் இருதயம் உள்ளது:*

*"தேவன்" - மாபெரும் ஜீவி.*
*"தம்முடைய ஒரேபேறான குமாரனை" - மாபெரும் ஈவு.*
*"விசுவாசிக்கிறவன்" - மாபெரும் அஸ்திபாரம்.*
*"அவரில்" [இயேசுவில்] - மாபெரும் ஈர்ப்பு.*
*"எவனோ" - மாபெரும் வாய்ப்பு.*
*"அவன் கெட்டுப்போகாமல்" - மாபெரும் துன்பம்.*
*"ஆனால்" - மாபெரும் வேறுபாடு.*
*"நித்தியஜீவனை அடையும்படிக்கு" - மாபெரும் வாக்குத்தத்தம்.*
*"அவரைத் தந்தருளி": மாபெரும் செயல்பாடு.*
*"இவ்வளவாய் உலகத்தில்": மாபெரும் குழு.*
*"அன்புகூர்ந்தார்": மாபெரும் தனிப்பண்பு.*

*நீங்கள் வேதாகமம் முழுவதையும் புரிந்துகொள்ள முடியாமல் இருக்கலாம், ஆனால் நீங்கள் இந்த வசனத்தைப் புரிந்துகொள்ளுகின்றீர்களா? நீங்கள் புரிந்துகொண்டால், கர்த்தருடைய அழைப்பிற்கு நீங்கள் பதில்கொடுக்க வேண்டியது அவசியமாக உள்ளது. இந்த மாபெரும் வசனத்தின் சத்தியங்களினால் தொடப்படாமல் எவரொருவரும் இவற்றைப் புரிந்துகொள்ள முடியாது என்பது நிச்சயம். இன்று நீங்கள் சுவிசேஷத்தின் வல்லமையினால், தேவனுடைய அன்பினால் அசைக்கப்பட்டிருந்தால், அதைக் குறித்து நீங்கள் சிலவற்றைச் செய்யமாட்டீர்களா?*

---

*குறிப்புகள்*

[1]*இயேசுவின் "முதல் வருகையில்" அவர் ஒரு நியாயாதிபதியாக இன்றி, ஒரு இரட்சகராகவே இருந்தார்; ஆனால் அவரது இரண்டாம் வருகையில் அவர் நமது நியாயாதிபதியாக இருப்பார் (அப். 17:31).* [2]*சிலர் உரிமைகோருவது போல், இது தேவனுடைய திட்டம் முழுவதையும் கூறிமுடிப்பதில்லை, ஆனால் இது தெய்வீக திட்டத்தின் அடிப்படைக் கூறுகளைத் "தொட்டு நிற்கிறது."* [3]*யோவான் 3:16க்கான இந்தப் பொதுவான அணுகுமுறை பல வெளியீடுகளில் காணப்பட்டுள்ளது. இது எனது வெளியீடாக உள்ளது. இந்தக் கருத்தைத் தோற்றுவித்தது யார் என்று எனக்குத் தெரியவில்லை.* [4]Daniel Webster, quoted in Frank S. Mead, comp. and ed., *12,000 Religious Quotations* (Grand Rapids, Mich.: Baker Book House, 1989), 189. [5]*தேவன் தமது சித்தத்திற்குச் சீர் பொருந்தியதாக உள்ள எதையும் செய்ய முடியாது என்று நீங்கள் நினைத்துப் பார்க்கவும் முடியாது.* [6]*''ஒரேபேறான'' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது ''தனிச்சிறந்த, ஒரு வகையான" என்ற கருத்தைத் தெரிவிக்கிறது.* [7]Isaac Watts, "When I Survey the Won-

drous Cross," *Songs of Faith and Praise*, comp. and ed. Alton H. Howard (West Monroe, La.: Howard Publishing Co., 1994). [8]*இந்த வாக்கியமும் இதற்கு அடுத்த வருகிறதும், உடைமைகளை இழந்துபோன அந்த விவசாயி ஆயுள்காப்பீடு செய்திருக்கவில்லை என்று யூகிக்கிறது.* [9]*மாற்கு 10:30; கலாத்தியர் 6:8; 1 தீமோத்தேயு 6:12; தீத்து 1:2 ஆகிய வசனங்களைக் காணவும்.* [10]*அப். 20:28ஐக் காணவும்.*

[11]*உபாகமம் 9:2-4, பாவம் நிறைந்த உலகத்தை விவரிக்கப் பயன்படும் ஒரு வசனப்பகுதியாக உள்ளது.* [12]*தீத்து 2:11; 1 தீமோ. 2:3, 4 ஆகியவற்றையும் காணவும்.* [13]*அன்பைப் பற்றிய கூடுதலான வசனப்பகுதிகளுக்கு, 1 பேதுரு 4:8; எபேசியர் 3:17 ஆகியவற்றைக் காணவும்.* [14]*சிலர் இதைப் பிரசங்கத்தில் ஒரு தனிக்கருத்தாக எடுத்துரைக்கின்றார்கள்.* [15]*தேவன் அன்பாகவே இருக்கிறார் (1 யோவா. 4:7, 8).*